கோடிக்கணக்கான ஏழை மாணவர்கள் 'அப்பா' என்று அன்பாக அழைக்கும் ஒரே முதல்வராகத் திகழ்கிறார்! இன்றைக்கு எந்த நிலை வந்தாலும் - நம்முடைய

முதல்வரின் கொள்கை சாசனத்தை எவராலும் மாற்ற முடியாது!

சென்னை கிழக்கில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் நடைபெற்ற முதல்வர் பிறந்த நாள் விழாவில் - குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் புகழாரம்!

சென்னை, மார்ச். 23

சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னெடுப்பில் நடைபெற்ற முதலமைச்சரின் 72 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவில் ஆதீனகர்த்தர் குன்றக்குடி அடிகளார் ஆற்றிய உரை வருமாறு:-

எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்பதே தம் வாழ்வாக்கியவர்.

ஏழை குழந்தைகளுக்குத் தாயுமானவர் ஆகியவர்.

மதவெறி தீக்கிப் பகையானவர்.

மனிதநேயத்திற்கே உயிரானவர்

அவர்தான் நம் மனிதநேய மக்கள் முதல்வர் ஸ்டாலின் அவர்கள்.

எல்லோருக்கும் பெய்யும் மழையானார்.

எப்போதும் மனதில் நிலையானார்.

அந்த மகத்தான மனிதநேய மக்கள் முதல்வருக்குப் பிறந்த நாள் எடுக்கின்ற இனிய வேளையில், இங்கே மிக அருமையாக அனைவருமே உரையாற்றியதற்குப் பிறகு, நான் நீண்ட நேரம் எடுத்துக் கொள்ளாமல், சில செய்திகளைச் சொல்லவிருக்கின்றேன்.

நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர், தன் கல்லறையில் எழுதி வைத்துக் கொண்டது, "ஓய்வறியாச் சூரியன் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார்" - அந்தக் கலைஞரே சொல்லிய வார்த்தை - ஸ்டாலின் என்றால், உழைப்பு! உழைப்பு! உழைப்பு!!

அந்த உழைப்பின் வடிவமாக விளங்குகின்ற நம்முடைய மனிதநேய மக்கள் முதல்வர் அவர்கள், செயலின் வடிவமாக விளங்குகின்ற நம்முடைய பாராட்டுதலுக்குரிய ஸ்டாலின் அவர்கள், செயல்பாபு எனும் சேகர்பாபு என்று அழைத்ததுதான், அவர் ஆற்றிய துறைகளில் முத்திரைப் பதித்தது.

ஏறத்தாழ முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களோடு 32 ஆண்டுகால உறவு. இதே மெரினா கடற்கரையில் பவள விழா மேடையில் குறிப்பிட்டார் கலைஞர் அவர்கள். அந்த விழா ஏற்பாட்டாளர் சைதை கிட்டு அவர்களை, "கிட்டு, நீ செயலில் சிட்டு" என்றார்.

இன்றைக்கு நம் முதல்வர் அவர்கள், செயல்பாபு எனும் சேகர்பாபு என்று அழைத்திருப்பதுதான் பெருமைக்குரியது.

அனைவரும் மிகச் சிறப்பாக, உணர்வுபூர்வமாக, உணர்ச்சிப்பூர்வமாக உரையாற்றிய பிறகு, நான் சில செய்திகளைச் சுருக்கமாகப் பகிர்ந்து கொண்டு விடைபெறுவதில், நம் அறநிலையத் துறை அமைச்சர் மகிழ்ச்சியோடு இருக்கின்ற தருணத்தில் விடைபெறுவதில், சில செய்திகள்.

எது ஆன்மிகம் என்பதை சரியாகப் புரிந்துகொண்டவர் சேகர்பாபு!

பெரியபுராணம் கற்றவர் இல்லை சேகர்பாபு அவர்கள். திருமுறைகளில் தெளிந்தவர் இல்லை. ஆகமம் அறிந்தவர் இல்லை. கண்ணுக்குத் தெரியாத ஆகமத்தை அறிந்தவர் அல்ல. ஆனாலும், எது ஆன்மிகம் என்பதை சரியாகப் புரிந்துகொண்டவர் சேகர் பாபு அவர்கள்.

அன்புக்குரியவர்களே, சேக்கிழார் எழுதிய பெரியபுராணத்தில், பூசலார் என்று அடியவர் வருவர். அவர் இறைவனுக்கு ஒரு கோவில் கட்டுவார். கையில் பணம் இல்லாத என்னைப் போன்றவர். கையில் பணம் இல்லாத அவர், இறைவனுக்காக எழுப்புகின்ற கோவில். இதயக் கோவில். இதயத்திலேயே கோவில் கட்டுகிறார். மனதிற்குள்ளேயே கோவில் கட்டுகிறார்.

நாடாளுமன்ற பல்லவ மன்னன், பெரிய கட்டலி கோவிலைக் கட்டுகிறான். அந்தக் கட்டலிக் கோவிலைக் கட்டித் திறப்பதற்காக, நாளும், நேரமும் நிச்சயிக்கப்படுகிறது. குடமுழுக்கு நேரம். கடவுள் எழுந்தருளுவார் என்று எதிர்பார்க்கிறார்கள் ஆகம வல்லுநர்கள். ஆனால், அந்தக் குறித்த நேரத்தில், இறைவன் எழுந்து அருள்பாலிக்கவில்லை.

பூசலாருக்குக் கனவு வருகிறது; பல்லவ மன்னனுக்கும் கனவு வருகிறது.

பல்லவ மன்னனின் கனவில் வந்த இறைவன் சொல்கிறார், "நீ கட்டிய கோவிலுக்கு நான் வரவில்லை. நான் வேறு கோவிலுக்கு அதே நேரத்திற்குப் போகிறேன், நீ வந்து பார்" என்று.

"வேறு எந்தக் கோவிலுக்குப் போகிறீர்கள்" என்று பல்லவ மன்னன் கேட்கிறான்.

"பூசலார் என்ற அடியவன் இருக்கிறார், அவரை வந்து பார்" என்று இறைவன் சொல்கிறார்.

பூசலார் என்கிற அடியவரைத் தேடி, படை பரிவாரங்களோடு பல்லவ மன்னன் வருகிறான்.

கல்லெல்லாம் பேசும் பொற்சிலைகளாக

மண்ணெல்லாம் விண்முட்டும் கோபுரங்களாக

வண்ணங்கலெலாம் உயிர்ப்புடைய ஓவியங்களாக உருவாக்கிய பல்லவ மன்னன் கோவிலில் எழுந்து அருள்பாலிக்காமல், ஏழை அடியவர் பூசலாரின் இதயக் கோவிலில் இறைவன் எழுந்து அருள்பாலிக்கிறான்.

ஆயிரக்கணக்கான திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு!

இதுபோலத்தான் தமிழ்நாட்டில், எத்தனை ஆயிரக்கணக்கான திருக்கோவில்களில் குடமுழுக்கு.

ஆண்டுதோறும் 2500 கோவிலுக்கு - ஒரு கோவிலுக்கு ரூ.இரண்டரை லட்சம் விகிதம், பல நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்களை திருப்பணிக்காக வாரி வழங்கப்படுகிறது.

குடமுழுக்கு எல்லா நாள்களிலும் கும்பாபிசேகம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதுவரை நடந்திராத வரலாற்றுச் சாதனை - எல்லா சுபமுகூர்த்தங்களிலும், திருமணங்கள் நடைபெறுவதைப்போல, தனி மனித குடும்பங்களில் திருமணங்கள் நடைபெறுவதைப் போல, திருக்கோவில்களில் குடமுழுக்கு விழா நடைபெறாத நாளே இல்லை.

சிறிய கோவில்களில் அல்ல - மிகப் பெரிய பிரம்மாண்டமான கோவில்களில், திருப்பணிகள் நடைபெற்று, குடமுழுக்கு நடைபெறுகின்றன. ஆயிர மாண்டு பழைமையான கோவிலுக்குக் கும்பாபிசேகம் நடைபெறுகிறது.

ஏழைகளின் இதயக் கோவிலில் வீற்றிருக்கும் முதல்வர்!

இப்படிப்பட்ட சாதனையை நிகழ்த்திய காரணத்தினால்தான், நம்முடைய முதல்வர் அவர்கள், எப்படி பூசலார் என்ற அடியவரின் இதயக் கோவிலில் இறைவன் எழுந்து அருள்பாலித்தாரோ, ஏழைகளின் இதயக் கோவிலில், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொலுவீற்றிருக்கிறார்.

இந்தச் சாதனைக்கு யார் காரணம்?

பாராட்டுதலுக்குரிய நம்முடைய கவிஞர் சிநேகன் சொன்னதைப்போல, அவற்றைப் பட்டியலிடலாம். ஆனால், அதற்கு நேரம் இல்லை.

அய்யா விஜயகுமார் அவர்கள், குன்றக்குடி முருகன் கோவிலின் பக்தர். 20 ஆண்டுகளுக்கு முன்பு, பட்டுக்கோட்டையில், ஒரு திருமண மண்டபத்தை ஏழை மக்களுக்காகக் கட்டி, இலவசமாக வழங்கியதை, நாம் தான் திறந்து வைத்தோம்.

இங்கே வந்திருக்கின்ற அனைவரும் ஆன்மிக உள்ளத்திற்கு உரியவர்கள். அந்த நிலையில், நான் சொல்லவேண்டிய செய்தி இதுதான்.

எத்தனை திருக்கோவில்கள்?

எத்தனைத் திருக்குளங்கள்?

எத்தனைத் திட்டங்கள்?

அன்னதானத் திட்டம்! சேகர்பாபு சிறப்பாகச் செயல்படுகிறார்!

இளையான்குடி மாறன் அய்யனார் என்ற ஓர் அடியவர். எல்லோருக்கும் சோறு போட்டார். வறுமை வந்தது. விதை நெல்லை எடுத்து சோறு போட்டார்.

அப்படிப்பட்ட அடியவர்களின் இல்லங்களைப் போல, கோவில்களை மாற்றியவர் சேகர்பாபு. எல்லா இடங்களிலும் அன்னதானம். முழுநேரம் அன்னதானம். கோவிலைத் திறக்கிறோமோ இல்லையோ, ஏழை வீட்டு வயிறுகள் நிரம்ப வேண்டும் என்ற பணியை மிகச் சிறப்பாக நம்முடைய சேகர்பாபு அவர்கள் சிறப்பாக செய்கிறார்.

அவருடைய சாதனைகளை யாருமே சொல்லாமல் இருக்க முடியாது.

ஏனென்றால், அறுபடை வீட்டுத் திட்டம் என்று சொல்லிக்கொண்டே போகலாம். புத்தகப் பதிப்பை, கோவில்களில் பிரசாத ஸ்டால்கள் இருந்தன. இன்றைக்குக் கோவில்களில் பிரசாத ஸ்டால்களுக்கு மேலாக புத்தகங்கள்

கிடைக்கின்றன.

அறிவு வளரவேண்டும் என்று ஆன்மிகத்தின் தளத்தில் அவர்கள் செய்த சாதனை.

அறநிலையத்துறையின் அரும்பணி!

உ.வே.சா. என்ற ஓர் அறிஞர் குன்றக்குடி வந்தார். சிலப்பதிகார ஏடு கிடைத்தது - குன்றக்குடியில்தான் கொடுத்தார்கள்.

அவர் சொன்னார், "குன்றக்குடிக்கு நான் வரவில்லை என்றால், என் வாழ்வின் பெரிய சிக்கல் தீர்ந்திருக்காது" என்றார்.

சிலப்பதிகாரத்தையும், புறநானூற்றையும் பதிப்பதற்கான வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

அப்போது அவர் சொன்னார், "நான் சிவ ஆலயத்தைப் பார்த்திருக்கின்றேன்; விஷ்ணு ஆலயத்தைப் பார்த்திருக்கின்றேன்; முருகன் ஆலயத்தைப் பார்த்திருக்கின்றேன். குன்றக்குடியில்தான் நான் தமிழாலயத்தைப் பார்க்கிறேன்" என்று உ.வே.சா. அவர்கள் வரலாற்றில் பதிவு செய்கிறார்.

அப்படி ஆதீனங்கள் செய்துகொண்டிருந்த அரும்பெரும் பணியை, இன்றைக்கு அறநிலையத் துறை செய்கிறது என்றால், அதற்கு நம்முடைய சேகர்பாபு அவர்கள்தான் காரணம்.

விஜயகுமார் உரையாற்றும்போது

> **தன்** வாழ்நாளில், முத்தமிழறிஞர் கலைஞர் 15 வயதில் புதுச்சேரி வீதியில் புரட்டிப் போட்டவர். உயிர் பிழைத்து வந்தவர். தமிழ்நாட்டு மக்களின் உயிர்க் காப்பதற்காக, 60 ஆண்டிற்கு மேலாக உழைப்பதற்குத்தான், அந்நாளில் அவர் தப்பி வந்தார்.
>
> அவரின் தொடர்ச்சியாக, நம்முடைய மனிதநேய மக்கள் முதல்வர், முதன்முதலாக தன் தலைவரை "அப்பா" என்று அழைத்துக் கொள்ளலாமா? என்று மரணப் படுக்கையில் இருந்த தலைவரைப் பார்த்துக் கேட்ட அவர், முதன்முதலில் தன் அப்பாவை அல்ல - தலைவராகப் பார்த்தது, 6 மாத குழந்தையாக, 1953 இல் கல்லக்குடி சிறைச்சாலையில்தான், தன் அப்பாவை தலைவராகப் பார்க்கிறார்.
>
> அவர் சொன்னார், "என் தாயின் கருவறையில் நான் இருக்கிறபொழுது, என் தலைவர் சிறைச்சாலையில் இருந்தார்." 6 மாத குழந்தையாக இருக்கிறபோது, கல்லக்குடி போராட்டத்தில் கைதாகிய தலைவரை சிறையில் பார்த்தவர்தான்.

சொன்னார், "இதைவிட நான் வேறு என்னய்யா சொல்வது?" என்று.

அய்யாவைவிட வேறு என்ன நாம் பேசிவிட முடியும்?

இதைவிட நான் வேறு என்னய்யா சொல்ல முடியும்? என்று அவர் சொல்லுகின்ற தொனியிலேயே நம் உள்ளம் கவர்ந்தது.

இன்றைக்கும், பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவுத் திட்டம். இளம் பிஞ்சு மழலைகள் பசியோடு பள்ளிக்கு வரக்கூடாது என்று, அவர் ஆற்றிய அந்தப் பெரும் பணிக்கு ஈடு இணை இல்லை.

நம்முடைய மயிலாப்பூரில் ஒரு கல்லூரிக்கு அடிக்கல் நாட்டு விழா. முதலமைச்சர் இருக்கின்ற மேடையில் யாரையும் பேச விடமாட்டார் நம்முடைய அறநிலையத் துறை அமைச்சர். இந்தப் பிறந்த நாள் விழா மேடையில்தான் பேசுவதற்கு அனுமதி கொடுப்பார்.

அவரைத் தாண்டி, கல்லூரி பிள்ளைகள் எழுந்து, முதல்வரைப் பார்த்து, "ஒரு நிமிடம் எனக்கு வாய்ப்புக் கொடுங்கள் பேசுவதற்கு" என்று கேட்கிறார்.

கல்வி வள்ளலுக்கு செலுத்தும் கைம்மாறு!

அதற்கு முதல்வர் அனுமதி கொடுத்ததும், மேடைக்கு வந்த அந்தப் பிள்ளை, கண்ணீரோடு அந்தப் பிள்ளை சொல்கிறது, **"நானெல்லாம் படிப்பேனா? என்று எனக்குத் தெரியாது. கல்லூரி வாயிலில் கால் வைப்பேனா என்று எனக்கு சந்தேகம்தான். கொரோனா தொற்று வந்ததால், என்னுடைய அப்பா இறந்து விட்டார். அப்பா இல்லாததால், எனக்கு இனி படிப்புக் கிடையாது என்று நான் நினைத்தேன். ஆனால், தமிழ்நாடு அரசின் திட்டங்களான தமிழ் மகள் திட்டம், தவப்புதல்வன் திட்டங்களால் எனக்குக் கல்லூரி வாழ்க்கைக் கனவு எனக்கு நனவானது. இப்போது நான் கைநிறைய சம்பாதிக்கின்றேன். என்னுடைய அம்மாவை நான் காப்பாற்றுகிறேன்"** என்றார்.

பிறகு முதலமைச்சரைப் பார்த்து, **"உங்களை நான் அப்பா என்று அழைக்கலாமா?"** என்று கேட்டது அந்தப் பிள்ளை.

நண்பர்களே, இது நடிப்பல்ல! இது கசந்த வாழ்க்கையில் கிடக்கின்ற ஏழைக் குழந்தைகளின் கண்ணீர்த் துளிகளைத் துடைக்கின்ற ஒரு கல்வி வள்ளலுக்குச் செலுத்துகின்ற கைம்மாறு.

எல்லாப் புகழும் இறைவனுக்கே என்பதுபோன்று, எல்லாப் புகழும் என் முதல்வருக்கே என்று சொல்பவர்தான் சேகர்பாபு.

புகழ்பெற்ற விஞ்ஞான ஐன்ஸ்டீன். தியரி ஆஃப் நேட்டிவிட்டி என்ற கொள்கையைப் பிரகடனம் செய்கிறார். உலகமே அவரை கொண்டாடுகிறது. உலகத்திற்குக் கிடைத்த மிகப்பெரிய அறிவியல் பொக்கிஷம், இயற்பியல் பொக்கிஷம் அவர். நோபல் பரிசு கிடைக்கிறது அவருக்கு. நாள்தோறும் பாராட்டு விழா நடைபெறுகிறது அவருக்கு. ஒரு நாள் ஐன்ஸ்டீனுக்கு களைப்பாக இருப்பதால், அவருடைய கார் ஓட்டுநரை அழைத்து, (ஐன்ஸ்டீனைப்போலவே கார் ஓட்டுநர் இருப்பார்) "தம்பி, நான் இன்றைக்கு மேடைக்குப் போகவில்லை. நீ மேடைக்குப் போய், பரிசு கொடுப்பார்கள் வாங்கிவிட்டு வா" என்று சொல்கிறார்.

கார் ஓட்டுநரும் மேடைக்குச் செல்கிறார். விஞ்ஞானி ஐன்ஸ்டீன் அந்தக் கூட்டத்தில் கடைசியாக அமர்ந்திருக்கின்றார்.

மேடைக்கு வந்த கார் ஓட்டுநர், பரிசு வாங்குவதற்கு நாற்காலியிலிருந்து எழுந்திருக்கின்றார்.

முதல்வரின் முதன்மைத் தளபதி சேகர்பாபு!

உடனே கூட்டத்திலிருந்து ஒருவர் எழுந்து, "எதற்காக உங்களுக்குப் பரிசு தருகிறார்கள்?" என்று கேட்கிறார்.

இவர், "நான்தான் தியரி ஆஃப் நேட்டிவிட்டியை சொன்னேன் அல்லவா, அதற்காகத்தான் இந்தப் பரிசு என்கிறார்.

உடனே அவர் சொல்கிறார், "நீ கொடுத்திருக்கின்ற தியரி தவறு. E=MC க்யூப்தான் வரும். நீங்கள் E=MC ஸ்கொயர் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதை நிரூபித்துவிட்டு, பரிசு வாங்கிக் கொள்ளுங்கள்" என்றார்.

ஆடிப்போவார் என்று நினைத்தார் ஒரிஜினல் ஐன்ஸ்டீன். ஆனால், டுப்ளிகேட் ஐன்ஸ்டீன் "என்னய்யா கேள்வி கேட்கிறீர்கள்? இதெல்லாம் ஒரு கேள்வியா? இதற்கெல்லாம் நான் பதில் சொல்லமாட்டேன். என்னுடைய கார் ஓட்டுநர் பதில் சொல்வார்" என்று சொல்லிவிட்டு, "வாப்பா, டிரைவர், மேடைக்கு வா" என்றார்.

இதற்குப் பெயர்தான் பிரசன்ஸ் ஆஃப் மைண்ட்.

படிப்பதில்லை, படிப்பதை உள்வாங்கிக் கொள்வதல்ல. கற்றததைத் திரும்பத் திரும்பக் கிளிப்பிள்ளை போன்று சொல்வது அல்ல.

வாழ்க்கைப் போராட்டத்தில் சந்திக்கின்ற சவால்களை சரியான தருணத்தில், யார் எதிர்கொள்கிறார்களோ, அவர்கள்தான் வெற்றிக்கு உரியவர்கள்.

அப்படி வெற்றிக்கு உரியவர்தான் நம் மனிதநேய மக்கள் முதல்வர். அந்த மக்கள் முதல்வருக்குக் கிடைத்த முதன்மைத் தளபதிதான் நம்முடைய சேகர்பாபு அவர்கள்.

இவர் தளபதிக்குக் கிடைத்த தளபதி!

தலைமைப் பண்பு!

தலைமைப் பண்பு என்றால் என்ன?

மன்னன் அலெக்ஸாண்டர், உலகத்தையே வென்றார். இனி வெல்வதற்கு இடமே இல்லை என்று சொன்னார்.

அவருடைய காலத்தில், ஒரு பரதேசிக்கு ரொம்பப் புகழ்.

அலெக்ஸாண்டர் கேட்டார், "என்னப்பா, என்னைவிட உனக்கு எல்லோரும் புகழ்மாலை சூட்டுகிறார்களே" என்றார்.

அந்த சாது பெரிய விஞ்ஞானியல்ல; மெய்ஞ்ஞானி.

ஒரே வரியில் டயோஜினிஸ் சொன்னார், "அலெக்ஸாண்டர் நீ மண்ணை வென்றவன்; நானோ, என்னை வென்றவன். தன்னை வென்றவன்தான் தரணி ஆள முடியும்" - அதைச் சொன்னவர் நம் பேரறிஞர் அண்ணா. அதை வாழ்நாளில் கடைபிடித்தவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர். அன்புக்குரிய நம்முடைய மக்கள் முதல்வர் ஸ்டாலின் அவர்கள்.

ஒரு கப்பல் கடலில் சென்று கொண்டிருக்கின்றது. கப்பல் தலைவன் ஒரு போர் வீரனைப் பார்த்து, "நீ கடலில் குதி" என்கிறான். உடனே அவன் கடலில் குதித்துவிடுகிறான். இப்படியே மூன்று வீரர்கள் கடலில் குதித்துவிடுகிறார்கள். நான்காவது ஒருவனைக் குதி என்று சொன்னபோது, அருகில் இருப்பவன், அவனுடைய கையைப் பிடித்து, "ஏம்பா, உன் தலைவன்தான் சொல்றான் என்றால், நீ கடலில் குதித்து உயிர் விடுவதற்குத் தயாராக இருக்கிறாயே, ஏன்?" என்றான்.

கையைத் தட்டிவிட்டு அவன் சொன்னான், "இந்த மனிதனோடு இருந்து வாழ்வதைவிட, இந்தக் கடலில் குதித்து சாவது எவ்வளவோ மேல்" என்று.

தலைமைப் பண்பு என்பது, தன்னைக் காப்பாற்றுவது மட்டுமல்ல, தன்னை சார்ந்தோரையும் காப்பாற்றுவதுதான். அந்தப் பணியில், எந்நாளும் சிறந்து விளங்குபவர்தான், நம் மனிதநேய மக்கள் முதல்வர் அவர்கள்.

அன்பிற்குரியவர்களே, நான் நிறைவாகச் சொல்கிறேன், காலங்கருதி சொல்கிறேன்.

நம்முடைய அமைச்சர் அவர்கள் மகிழ்ச்சிக்காக, மனநிறைவோடு நான் முடிக்கிறேன்.

தன் வாழ்நாளில், முத்தமிழறிஞர் கலைஞர் 15 வயதில் புதுச்சேரி வீதியில் புரட்டிப் போட்டவர். உயிர் பிழைத்து வந்தவர். தமிழ்நாட்டு மக்களின் உயிர்க் காப்பதற்காக, 60 ஆண்டிற்கு மேலாக உழைப்பதற்குத்தான், அந்நாளில் அவர் தப்பி வந்தார்.

அவரின் தொடர்ச்சியாக, நம்முடைய மனிதநேய மக்கள் முதல்வர், முதன்முதலாக தன் தலைவரை "அப்பா" என்று அழைத்துக் கொள்ளலாமா? என்று மரணப் படுக்கையில் இருந்த தலைவரைப் பார்த்துக் கேட்ட அவர், முதன்முதலில் தன் அப்பாவை அல்ல - தலைவராகப் பார்த்தது, 6 மாத குழந்தையாக, 1953 இல் கல்லக்குடி சிறைச்சாலையில்தான், தன் அப்பாவை தலைவராகப் பார்க்கிறார்.

அவர் சொன்னார், "என் தாயின் கருவறையில் நான் இருக்கிறபொழுது, என் தலைவர் சிறைச்சாலையில் இருந்தார்." 6 மாத குழந்தையாக இருக்கிறபோது, கல்லக்குடி போராட்டத்தில் கைதாகிய தலைவரை சிறையில் பார்த்தவர்தான்.

நெருக்கடி கால சிறைவாசம்!

23 வயதில், இன்றுகூட உணர்ச்சிவயப்பட்ட உரையை ஆற்றிய நம்முடைய பாராட்டுதலுக்குரிய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், நெருக்கடி காலத்து நினைவுகளை இன்றைக்கு நினைவு கூர்ந்தார்.

23 வயதில், நம்முடைய மனிதநேய மக்கள் முதல்வர் ஸ்டாலின் அவர்கள், நெருக்கடி கால சிறைவாசத்தை அனுபவித்தபோது, தலைவர் கலைஞர் அவர்கள், சிறைக்கு வந்து அவரைச் சந்திக்கின்றார்.

ஆக, தந்தைக்கும், மகனுக்குமான உறவு, ஆட்சிக் கட்டிலில் இருந்ததைவிட, சிறைச்சாலையில் இருந்த காலங்கள்தான் அதிகம். அதனால்தான் மரணப் படுக்கையில் கேட்டார்.

உங்களை நான், உலகத்திற்கே வழிகாட்டிய முத்தமிழறிஞர் கலைஞர் மறைந்துவிட்டார். உலகமே தன்னதுடிப்பை நிறுத்திவிட்டதோ என்று எண்ணுகின்ற தருணத்தில், தானும் செயலற்றுப் போய்விடாமல், தமிழ் மக்களுக்கு வழிகாட்டுகிற நிலையில், "அப்பா, அப்பா" உலகத்திற்குக் கோடிக்கணக்கான வார்த்தைகளைப் பேசிய கலைஞர், மவுன பாஷை பேசிக் கொண்டு படுத்துக் கிடந்தார்.

"அப்பா" என்று அழைத்துக் கொள்ளலாமா? என்று உருக்கமாகக் கேட்டார்.

ஆக, அவரைக் கடைசித் தருணத்தில்தான் அவரை அப்பாவாகப் பார்த்தார்.

தன் வாழ்நாள் முழுவதும் தலைவருக்குத் தொண்டராகவே வாழ்ந்து, தொண்டர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காகவே பணி செய்தார்.

இந்நிலையில்தான் நாம் ஒன்றை எண்ணிப் பார்க்கின்றோம். தலைவர் மறைந்துவிட்டார். இயக்கத்தின் இமயப் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார். இமயத்தின் சுமை தன்மீது சுமர்த்தப்படுகிறது.

நான் தலைவரைப் போல பேசமாட்டேன்; தலைவரைப் போல எழுதத் தெரியாது. தலைவரைப் போல சிந்திக்கத் தெரியும்; தலைவரைப் போல செயலாற்றத் தெரியும். துணிவோடு நான் போராடுவேன். யாரும் என்னை அதிகமாகப் புகழவேண்டாம்.

பழிச்சொல் வந்தாலும், நான் உழைத்து உழைத்து அந்தப் பழியைத் துடைப்பேன் என்று சொன்னவர்தான். அப்படிச் சொல்லி, அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர், "இனி நீங்கள் பார்க்கப் போவது வேறு ஸ்டாலின்" என்று சொல்கிறார்.

செயல் தலைவராக, தலைவர் மறைவிற்குப் பிறகு பொறுப்பேற்றவர்; இனி நீங்கள் பார்க்கப் போவது வேறு ஸ்டாலின் என்று சொல்கிறார்.

நெருக்கடி காலத்து சிறைவாசத்தைத் துணிவோடு எதிர்கொள்ளும்போதும் சொன்னார், இப்போது வேறு ஸ்டாலின் மாறிக் கொண்டிருக்கின்றார் என்றார்.

யார் அந்த வேறு ஸ்டாலின்?

கோடிக்கணக்கான மக்களுக்காக, தன் வாழ்க்கையை, உயிரை, உடைமையை அர்ப்பணிப்பதற்குத் தயாரான தலைவர்தான் அந்த வேறு ஸ்டாலின்.

"அப்பா, அப்பா" என்றழைக்கப்படும் ஒரே முதல்வர்!

நான் நிறைவாகச் சொல்கிறேன், "அப்பா என்று உங்களை அழைத்துக் கொள்ளலாமா?" என்று தன் சொந்தத் தந்தையை ஒரு தொண்டனாக இருந்து கேட்டார், நம் ஸ்டாலின் அவர்கள்.

இன்று, கோடிக்கணக்கான கல்லூரி குழந்தைகள், கல்வி பயில்கின்ற ஏழை மாணவர்கள், "அப்பா, அப்பா" என்று அன்பாக அழைக்கப்படுகின்ற ஒரே முதல்வராக, நம் மனிதநேய மக்கள் முதல்வர் விளங்கிக் கொண்டிருக்கின்றார். இன்றைக்கு அவருடைய பிறந்த நாள் சாசனம் என்ன?

இன்றைக்கு எந்த நிலை வந்தாலும், நம்முடைய மனிதநேய மக்கள் முதல்வரின் கொள்கை சாசனத்தை மாற்ற எவராலும் இயலாது என்ற பிரகடனம்தான் - அவர் வாழ்வின், பணியின், கடமையின் தாரக மந்திரம்.

அந்தத் தாரக மந்திரத்தை செயலாக்குகின்ற தளபதிகளில், முதன்மைத் தளபதியாக, சிறந்ததளபதியாகவிளங்குகின்ற நம்முடைய அறநிலையத் துறை அமைச்சர் செயல்பாபு என்ற சேகர்பாபு அவர்களுக்கு வாழ்த்துகளைப் பாராட்டுகளை, நன்றிகளைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு ஆதீனகர்த்தர் குன்றக்குடி அடிகளார் உரையாற்றினார்.